*28*

# சிலுவையின் பெரிய வார்த்தைகள், 1

## ரோமர் 5:11-21

*“அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மை பாராட்டுகிறோம்” (ரோமர் 5:11).*

### “நிவிர்த்தி”

வரலாறு முழுவதிலும் வேதவசனங்களின் அழைப்பைக் காட்டிலும் அதிகம் திகைப்புக்குரிய விஷயம் வேறெதுவும் இல்லை. சிலுவையின் ஆழங்களை ஆழ்ந்தறியும்படி தேவன் நம்மை அழைக்கிறார். நாம் அதைச் செய்யும்போது, அமைதியில் திகைத்து நன்றியறிதலினால் மூழ்கடிக்கப்படுகிறோம்.

நிவிர்த்தி, அதாவது தேவனுடன் ஒன்றாக்கப்படுதல் என்பது வேதாகமத்தின் மாபெரும் ஆய்வுக் கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. இது கிறிஸ்தவத்தை மற்ற எல்லா மதங்களிலும் இருந்து பிரிக்கிற ஒரே சத்தியமாக உள்ளது. காலத்தில் ஒரு நாளில் - சிலுவையில், இயேசுவின் மரணத்தில் - பாவம் நிறைந்த மனிதன் தேவனுடைய நித்திய அன்பைக் கண்டான் (யோவான் 3:16).

பாவம் என்பது பரிசுத்த தன்மையை மீறி அதை நீக்கிப்போடுகிறது. பாவத்தின் மூலமாக மனிதன் தன்னைப் பரிசுத்தமான தேவனிடத்தில் இருந்து பிரித்துக்கொண்டான். பாவியாக உள்ள எவரும் தேவனுடைய பிரசன்னத்தில் நிற்க உரிமையோ அல்லது காரணமோ கொண்டிருப்பதில்லை. பாவத்தில் உள்ள மனிதன் இரட்சிக்கப்பட முடியுமா? முடியுமென்றால், எவ்வாறு, எப்போது மற்றும் யாரால் முடியும்? பாவம் என்பது பிரச்சனைகள் யாவற்றிலும் பெரியதாக உள்ளது, ஆனால் அதைத் தீர்த்து வைக்கவே இயேசு மரித்தார்.

இயேசு, இரட்சிக்கப்பட்டவர்களையல்ல ஆனால் இழந்துபோகப்பட்டிருப்பவர்களைத் தேடவே வந்தார் (லூக்கா 19:10). தேவன் மன்னிக்கும் தேவனாக இருக்கிறார் என்பதற்குக் கல்வாரியானது நம்புதற்கு அரிய வெளிப்படுத்துதலாக உள்ளது. நிவிர்த்தி என்பது தேவனுடைய அன்பின்

கொடையாக உள்ளது!

நிவிர்த்தி என்பது நமது புரிந்துகொள்ளுதலுக்கும் நமது சரிக்கட்டுதலுக்கும் அப்பாற்பட்டதாக உள்ளது. ஒருபோதும் புரிந்துகொள்ளப்பட இயலாத விஷயங்களை விசுவாசம் நம்புகிறது. போதுமற்ற தன்மையை விலையாகக் கொடுத்துத் தெளிவை வாங்குவதைவிட நாம் முழுவதும் புரிந்துகொள்ள இயலாத இறையியல் ஒன்றை ஏற்றுக் கொள்வது மேன்மையானதாகும். பாவ நிவிர்த்தி இன்றி தேவனுடன் உண்மையான ஐக்கியம் இருக்க இயலாது. பாவம் பெறத் தகுதியான தண்டனையை இயேசு ஏற்றுத் துன்புற்றார். ஆகையால், பாவிகள் சிலுவையில் அறைதலைச் சார்ந்துள்ளனர். வேறு ஏதாவது ஒரு வழியில் பாவிகள் இரட்சிக்கப்பட்டிருக்க முடியுமென்றால், தேவன் தமது ஒரே பேறான குமாரனைப் பலிசெலுத்தியதில் கொடுமைக்காரராக இருந்திருப்பார். இயேசுவைக் குற்றம்சாட்டியவர்கள் தங்களை அறியாமலேயே ஆழமான சத்தியம் ஒன்றைப் பேசினர்: "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" (மாற்கு 15:31; லூக்கா 23:35ஐக் காணவும்). நமது கர்த்தர் தமக்கு ஒப்பானவர்களையோ அல்லது போட்டியாளர்களையோ கொண்டிருப்பதில்லை. அவர் யூதாகோத்திரத்துச் சிங்கமாக இருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 5:5), ஆனால் அவர் தேவ ஆட்டுக்குட்டியாகவும் இருக்கிறார். சிங்கத்தை நாம் அதிக சுலபமாக அடையாளம் கண்டுகொள்கிறோம். இருப்பினும், சிங்கத்தினால் வெற்றி வரவில்லை, ஆட்டுக்குட்டியாலேயே வெற்றி வந்தது (1 பேதுரு 1:18, 19). வெளிப்படுத்தின விசேஷத்தில் ஆட்டுக்குட்டியானவரைப் பற்றிய மாபெரும் போதனை உள்ளது.[1]

"நிவிர்த்தி" என்ற வார்த்தை "அமுலாக்கத்தை ஏற்படுத்துதல், விஷயங்களைச் சரியாக்குதல், தவறு செய்யப்பட்ட நபருக்குத் திருப்தி அளித்தல்" என்று அர்த்தப்படுகிறது. நிவிர்த்தி என்பது "தேவன் சரியானவராக இருக்கிறார்" என்று மறைமுகமாக உணர்த்துகிறது. அவர் - பாவம் என்ற - நமது பிரச்சனையைக் குறித்துச் சரியானவராக இருக்கிறார். அவர் - சிலுவை என்ற - தீர்வைக் குறித்துச் சரியானவராக இருக்கிறார். நிவிர்த்தி என்பது வைரத்தைப் போன்றதாக உள்ளது: ஒரு திசையில் இருந்து நாம் அதை முழுவதும் காண இயலாது. சிலுவையின் ஒரு பக்கத்தை மற்ற பக்கங்களுக்கு மேலாக வலியுறுத்துவதினால் மிகமுக்கியமான தவறுகள் விளைகின்றன. இயேசு ஒரு சிலுவையில் மரித்தார் - அது வரலாறாக உள்ளது. இயேசு எனக்காக மரித்தார் - அது இரட்சிப்பாக உள்ளது. நம் ஒவ்வொருவருக்காகவும் இயேசு மரித்தார் என்பதை நாம் விசுவாசிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

## நிவிர்த்தியும் நீதிமானாக்கப்படுதலும்

ரோமருக்கு எழுதிய நிருபம் வேதவசனங்களின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது என்றும், ரோமர் 3:20-26 வசனப்பகுதி

*ரோமருக்கு எழுதிய நிருபத்தின் மையப்பகுதியாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வசனப்பகுதியில் பவுல், "... தாம் நீதியுள்ளவரும் ... நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி ..." என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். நிவிர்த்தி என்பது நீதியின் மீது கட்டியெழுப்பப்படுகிறது. வேதாகமம் "நீதி செய்தல்" மற்றும் "நீதி" என்ற வார்த்தைகளை அடிப்படையில் ஒரே வகையில் பயன்படுத்துகிறது. நீதியின்றி ஒருவர் நீதி செய்தலைப் போதிக்க இயலாது என்பது தெளிவு. குற்றம் செய்தவர்களைத் தேவன் எவ்வாறு நீதிமானாக்க முடியும்? காலமும் மறக்கும் தன்மையும் பாவத்தை நீக்கிப்போடுவதில்லை. பாவத்தைப் பழுதுநீக்க இயலாது. தேவன்கூடப் பாவத்தைப் பழுதுநீக்குவதில்லை. பாவத்திற்கு உரிய தண்டம் செலுத்தப்பட வேண்டும், பாவம் தண்டிக்கப்பட வேண்டும். இவை யாவற்றையும் இயேசு செலுத்தினார்! இவ்வாறு, சிலுவை என்பது பாவத்திற்குத் தேவனுடைய பதிலாக உள்ளது.*

*இந்த சத்தியத்தின்மீது நமது கலாச்சாரம் இடறிவிழுகிறது (1 கொரிந்தியர் 1:22-25). மனிதன், தான் பாவத்தில் விழுந்து கிடப்பதைக் காண இயலாது. உலகவியமானது, "நீங்கள் நரகத்திற்குப் போக உங்களை அனுமதிப்பதற்கு [**அல்லது அதிலிருந்து உங்களைக் காப்பதற்கு**] தேவன் மிகவும் நல்லவராக இருக்கிறார்" என்று கூறுகிறது. இருப்பினும், பரிசுத்தமான தேவன், பாவத்தைத் தண்டனை பெறாது நிலைத்திருக்க அனுமதிக்க இயலாதவராக இருக்கிறார். தேவன் நீதியின் தேவனாக இருக்கிறார். "தேவன் அன்புகூருகிறார் எனவே அவர் பாவத்தைக் காணாது விட்டுவிடுவார்" என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளாதீர்கள்! இரக்கமானது நீதியை ஏமாற்ற இயலாது. தேவன் தாம் இருக்கும் நிலையைவிடக் குறைவான நிலைக்கு வரமுடியாது. நீதி என்பது உணர்வுப்பூர்வமான அன்பைவிட உயர்ந்த கொள்கையாக உள்ளது. நீதி கேட்டதை, கிருபை அளித்தது. மனிதன் செய்ய இயலாததை, மனுஷகுமாரனில் (இயேசுவில்) தேவன் செய்தார்.*

*நீதி என்பது வேதாகம இறையியலின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது. சிலுவையை நம்புதல் என்பது நீதியை ஏற்றுக் கொள்ளுதலாகவும் நரகத்தை ஏற்றுக்கொள்ளுதலாகவும் உள்ளது. நீதி (பரிசுத்தம்) இல்லாமல் அன்பு என்பது கருத்துணர்வை ஏற்படுத்த இயலாது. நீதியில்லையேல் கிருபை அவசியமற்றதாகிறது. நீதியில்லாமலிருந்தால், சிலுவையினால் பிரயோஜனம் எதுவும் இருப்பதில்லை. அன்பும் பரிசுத்தமும் ஒன்றாக இணைந்து செல்கிறது. குற்றம் என்பது பொருட்படுத்தப்படக்கூடியதில்லை என்றால், இயேசு வீணாகவே மரித்தார் என்றாகிறது. பாவம் - கண்டுகொள்ளப்படாமல் விடப்படக்கூடாது, மாறாக அது - சுத்திகரிக்கப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 6:11).*

*இயேசுவின் திரு அவதாரம் தன்னில் தானே நம்மை இரட்சிக்க முடியாததாக இருந்தது. கிறிஸ்துவினுடைய பூரணத்துவமான வாழ்வு நம்மை இரட்சிக்க முடியாததாக இருந்தது. இயேசுவின் பூரணமான போதனைகள் தங்களுக்குள்ளாகவே நம்மை இரட்சிக்க முடியாதவைகளாக இருந்தன. இரத்தம் இருக்கத் தேவையாயிற்று: "... இரத்தஞ்சிந்துதலில்*

*லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபிரெயர் 9:22). மரணம் இருக்க வேண்டியதாயிற்று: "... மரணமுண்டான பின்பே ..." (எபிரெயர் 9:15-17; 2:9ஐக் காணவும்; ரோமர் 5:10; கொலோசெயர் 1:22).*

அன்பு மாத்திரம் இயேசுவைச் சிலுவையில் ஆணிகளால் அறையவில்லை - அன்பும் நீதியும் இணைந்து அவரைச் சிலுவையில் அறைந்தன. தேவன் *நீதியுள்ளவராக* இருக்கிறார். அவர் *நீதிமானாக்குகிறவராகவும்* இருக்கிறார். தேவன் *நீதியானவராக* இருக்கிறார். மனிதன் தனது தகுதியான செயல்களினால் செய்ய இயலாதவற்றைத் தேவன் கிருபையினால் அளித்தார். இதனால்தான் இயேசு சிலுவையில் மரித்தபோது, "முடிந்தது!" என்று சத்தமிட்டார். "அவர் தாம் பட்டிராத கடன் ஒன்றை செலுத்தினார்; நான் என்னால் செலுத்த இயலாத ஒரு கடன்பட்டிருக்கிறேன்."[2] இயேசு தம்மையே அல்லது நம்மை மாத்திரம் இரட்சிக்க முடிந்தவராக இருந்தார். அவர் நம்மை இரட்சிப்பதற்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார். மனிதருடைய நியாதிபதி மனிதருடைய இரட்சகரானார் (யோவான் 5:22-27).

ஆகையால், இரட்சிப்பு என்பது நீதிமானாக்கப்படுதலில் தொடங்கி அதிலேயே முடிகிறது. கிறிஸ்துவுக்குள் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். நாம் பாவம் செய்திருக்கிறோம், ஆனால் தேவன் நம்மை மன்னித்திருக்கிறார். தேவனுடைய நீதியானது கிறிஸ்தவர்களைக்கூடத் திகைப்பில் ஆழ்த்தும் அளவுக்கு நேர்மாறானதாக உள்ளது!

## நிவிர்த்தியும் பதிலாகுதலும்

கல்வாரியில் நடுவில் இருந்த சிலுவை கிறிஸ்துவுக்கு உரியதாக இருக்கவில்லை; அது உங்களுக்கும் எனக்கும் உரியதாக இருந்தது! அவர் சிலுவையில் அறையப்படுதல் என்பது, *பிறருக்காகச் செயயப்பட்டதாக, பிரதிநிதித்துவமானதாக, பதிலாகுதலானதாக* இருந்தது! கிறிஸ்து நமக்குரிய மரணத்தை மேற்கொண்டார்; மற்றும் நாம் அவரிடத்தில் வந்து அவருக்குள் வாழ்கிறபோது, அவர் அளிக்கிற மன்னிப்பை நாம் மேற்கொள்கிறோம். பதிலாகுதல் இல்லையேல், சிலுவை என்பது பயங்கரமான மரணத்தை அடைந்த ஒரு வீரமுள்ள மனிதரின் வரலாறாக மாத்திரமே உள்ளது. நம்மையே நாம் இரட்சிக்க இயலாதிருப்பதால், நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் யாரேனும் ஒருவர் நம்மை இரட்சிக்க வேண்டியதாக உள்ளது.

எனது இரட்சிப்பிற்கு நான் பங்களித்தது என்ன? எனது பாவம்! நாம் இருந்திருக்க வேண்டிய ஒவ்வொரு நிலைக்கும் இயேசு பூரணமான பதிலியாக இருக்கிறார். மனுஷகுமாரர்கள் தேவகுமாரர்கள் ஆகும்படிக்குத் தேவகுமாரன் மனுஷகுமாரனாக ஆனார். கிறிஸ்துவின் இரத்தம் முதலாவதாக *நமக்காகக்* கொடுக்கப்பட்டது, பின்பு அன்றாடம் *நமக்குக்* கொடுக்கப்படுகிறது.

இன்னொருவருடைய தியாகம் மற்றும் பலியில் இருந்து ஒரு நபர் பயனடைய முடியுமா? ஆம்! வாழ்வும்கூடத் தன்னிலேயே பதிலியாக

இருத்தல் என்ற கருத்தினால் நிறைந்துள்ளது. அது தர்க்க ரீதியானதாக, சட்டப்பூர்வமானதாக, மற்றும் சூழ்நிலைக்குத் தக்கதாக உள்ளது. இந்த ஆழமான சத்தியத்தைப் பழைய ஏற்பாட்டின் பலி முறைமை நமக்குப் போதிக்கிறது. "போக்காடு" என்பது விரிவான உதாரணமாக உள்ளது. ஏசாயா 53 என்ற அழகிய அதிகாரம், பதிலியாக இருத்தலின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. பலி என்பதே அவ்வசனப்பகுதியின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது. இயேசு, உலகத்தோற்றமுதல் அடிக்கப் பட்ட ஆட்டுக்குட்டியாக இருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 13:8). வேதாகமம் தனது பக்கங்கள் யாவற்றினூடாகவும், பதிலியாக இருத்தலை உறுதிப்படுத்துகிறது.[3] இயேசு பாவமாக்கப்பட்டார். அவர் நமக்காகப் பாவமானார். சிலுவையைக் காட்டிலும் அதிகமாக நீதியும் அநீதியும் வேறு எங்கும் இருந்ததில்லை!

அநீதியானவர்கள் எப்படி நீதிமான்களாக்கப்பட முடியும்? நமது நீதியின்மையானது "அறிவிக்கப்பட்ட நீதி"யாக உள்ளது (ரோமர் 3:25, 26; பிலிப்பியர் 3:9; யாக்கோபு 2:23ஐக் காணவும்). எவரொருவரும் தம்மைத்தாமே நீதிமான் என்று அறிவிக்க முடியாது (ரோமர் 3:9, 10, 20). சுயநீதி சாத்தியமற்றதாக உள்ளது. தேவனே நீதிமானாக்குகிறவர் (ரோமர் 8:33), அவர் அதை இலவசமாகச் செய்கிறார் (ரோமர் 3:24) இது ஒரு கொடையாக உள்ளது. ஒரு கொடைக்கு, கொடுப்பவரும் பெறுபவருமாக *இருவர்* தேவை. கொடை என்பது பெறப்படாத வரையில் கொடையாக இருப்பதில்லை. மற்றும், கொடை என்பது பயன்படுத்தப்படாத வரைக்கும் கொடையாக இருப்பதில்லை. நாம் பாவப்பிரச்சனை ஒன்றைக் கொண் டுள்ளோம். நமது பதிலி என்ற வகையில் இயேசு ஒருவரே நமக்கு நீதியை அளிக்கக்கூடியவராக இருக்கிறார்.

பாவத்தைத் தேவன் காணாதிருக்கவோ அல்லது விலக்கிவிடவோ முடியாது. அவர் நமது பாவத்தைத் தம்மீது சுமந்து, அதற்காக [பாவத்திற் காகத்] தமக்குத்தாமே தண்டனை அளித்துக்கொண்டார். தேவனுடைய பரிசுத்த தன்மை கனப்படுத்தப்பட்டது, நமது பாவம் தண்டிக்கப்பட்டது, மற்றும் அவருக்குக் கீழ்ப்படிந்துள்ளவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். இரட் சிக்கப்பட்டவர்கள் நீதிமான்களாக இருப்பதாக தேவன் அறிவித்திருக் கிறார். இது சட்டமுறைமையான (சட்டரீதியான) அறிவிப்பாக உள்ளது. இது "நீதியாக்கப்பட்ட நீதிமானாக்கப்படுதலாக" உள்ளது.

இந்தச் செயல்முறையில் தேவன் மோசமான மக்களை நல்லவர் களாகவோ அல்லது துன்மார்க்கமான மக்களைப் பரிசுத்தர்களாகவோ ஆக்குவதில்லை. கிறிஸ்தவர்கள் விசுவாசம் நிறைந்தவர்களாக உள்ளனர் - அவர்கள் பூரணப்பட்டவர்களாக இருப்பதில்லை. நாம் சோதிக்கப் படக்கூடியவர்களாக மற்றும் பாவம் நிறைந்தவர்களாக இருக்கிறோம்; நாம் விழுந்து போகிறோம் (ரோமர் 3:9-12). கிறிஸ்தவர்கள் இன்னமும் பூமியில், காலத்தில், மாம்சத்தில் வாழ்கின்றனர். மாம்சத்தில் நன்மை வாசமா யிருக்கிறதில்லை என்று பவுல் கூறினார் (ரோமர் 7:18). கிறிஸ்தவர்கள் ... சாத்தானுடன், பாவத்துடன், மற்றும் சுயத்துடன் ஒரு யுத்தத்தில் ஈடு பட்டுள்ளனர். இருப்பினும், வெளிச்சத்தில் நடக்கிற கிறிஸ்தவர்கள் அவரது

இரத்தத்தினால் தொடர்ந்து சுத்திகரிக்கப்படுகின்றனர் (1 யோவான் 1:7). தேவன் கிறிஸ்தவர்களைச் சட்டபூர்வமாக நீதிமான்கள் என்றும், முறிக்கப் பட்ட பிரமாணத்தின் எந்தக் கடனில் இருந்தும் விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் அறிவிக்கிறார், ஏனென்றால் அவரே தமது குமாரனுக்குள் தண்டத்தைச் சுமந்தார். இந்தச் செயலில் நாம் கிறிஸ்துவுக்குள் ஞான ஸ்நானம் பெற்று கிறிஸ்துவை அணிந்து கொள்கிறோம் (ரோமர் 6:3, 4; கலாத்தியர் 3:26, 27). "நீதிமான்களென்று அறிவிக்கப்பட்டவர்களாக" இருத்தல் என்பது நமது நிலையை மாத்திரம் அல்ல, ஆனால் படிப்படியாக நமது பண்பையும் நடத்தையையும்கூட மாற்றுகிறது.

பாவ நிவிர்த்தி இல்லாமல் நீதிமான்களாக்கப்படுதல் இருக்க முடி-யாது. கீழ்ப்படிதல் உள்ள விசுவாசம் என்பது, கிருபை இலவசமாக அளிப்பவற்றைப் பெற்றுக்கொள்கிறது. சிலுவை என்பது தேவனுடைய ஊடுருவப்பட இயலாத ரகசியமாக, நமது சிந்தைகள் ஆழ்ந்தறியக்கூடி யதைக் காட்டிலும் மாபெரிய அன்பாக உள்ளது. உண்மைநிலையில் தேவன், நாம் புரிந்துகொள்ளக்கூடியவராக இருப்பதில்லை, ஆனால் அவர் நாம் நம்பக்கூடியவராக இருக்கிறார்.

கிறிஸ்தவத்தை விமர்சனம் செய்கிறவர்கள், பதிலியாக இருத்தல் என்பது பலியைப் பெரிதாக்குவதால், அதை [பதிலியாக இருத்தலை] வெறுத்துரைக்கின்றனர். இருப்பினும், வேதாகமரீதியான மதத்தின் முழுக்கருத்தும் பலியின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. ஆதியாக மத்தில் இருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும், பாவத்திற்குப் பலிசெலுத்தப்பட வேண்டும் என்று தேவன் நியமித்துள்ளார். இயேசு, ஒரு நல்லபோதகராக, ஒரு உபகாரியாக அல்லது வெறும் நபர் என்ற அளவுக்குக் குறைக்கப்பட இயலாது - அவர் நமது பலியாக இருக்கிறார். தேவன் ஒப்புரவாக்குபவராகவும் ஒப்புரவாக்கப்படுபவராகவும் இருக்கிறார். இயேசு மனிதகுலத்திற்குப் பதிலியாக இருக்கிறார். அவர் ஒரு மிருகத்தைப் பலிசெலுத்தவில்லை; அவர் தம்மையே பலிசெலுத்தினார். இயேசு தனிச்சிறந்த ஆசாரியராகவும் பலியாகவும் இருக்கிறார் என்பதை எபிரெயருக்கு எழுதிய நிருபம் வெளிப்படுத்துகிறது. ஒரு எழுத்தாளர், "கிறிஸ்து, நமது பாவங்களுக்காகத் தம்மையே பலியாகச் செலுத்தியதன் மூலம், அவர் ஒரு ஆசாரியராக நம்மை இரட்சிக்கிறார்" என்று கூறினார்.[4] பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலின் ஒவ்வொரு குடும்பத்தையும் காப் பதற்கு கதவுநிலையில் தேவன் இரத்தத்தைக் காண வேண்டியிருந்தது (யாத்திராகமம் 12:13). தேவனால் மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் தேவனால் வாங்கப்பட்டவர்களாக இருந்துள்ளனர். நமது சரீரங்கள் மும்முறை தேவ னுக்கு உரியவையாக உள்ளன - படைப்பின் மூலம், மீட்பின்மூலம் மற்றும் உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர்மூலம்.[5]

## நிவிர்த்தியும் சுவீகாரமும்

ஒரு பிள்ளையை சுவீகரிக்கப் பெற்றோர்களுக்கு உதவுவது போன்று நமது ஊழியத்தில் மன எழுச்சியூட்டுவது வேறு எதுவுமில்லை. சுவீகார

பதிவுத்தாள்கள் கையெழுத்திடப்படுகையில் நாம், "இக்குழந்தை, தான் எவ்வளவாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப புரிந்துகொள்ளா திருக்கிறது" என்று நாம் யாவரும் நினைக்கிறோம். சுவீகாரத்தின் கருத்து கிறிஸ்தவத்தின் புறக்கணிக்கப்பட்ட முகப்பாக உள்ளது. அந்தப் பாடக் கருத்தைப் பற்றி நாம் அரிதாகவே பேசுகிறோம் அல்லது படிக்கிறோம்.

அதை நாம் மாற்றி, நாம் சுவீகரிக்கப்பட்டதில் பரிசுத்த ஆவியானவர் மற்றும் அவரது பங்கு பற்றிச் சிந்திப்போமாக. தொடக்கமாக, நாம் கிறிஸ்தவரானபோது, தண்ணீரினாலும் ஆவியானவரினாலும் நாம் மீண்டும் பிறந்தவர்களாக இருக்கிறோம் என்பதை நினைவுகூருங்கள் (யோவான் 3:3-7). நாம் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டிருக்கையில், நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். அவர் சுவீகரித்தலின் ஆவியாக இருக்கிறார். அவர் நமது ஆவியுடனேகூடச் சாட்சியிடுகிறார் (ரோமர் 8:14-18). இது நம்மை "கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்கள்" ஆக்குகிறது. தேவன் அடிமைகளையல்ல ஆனால் பிள்ளைகளையே விரும்புகிறார் அதாவது, நாம் அவருக்கு அடிமைகளாய் இருப்பதையல்ல ஆனால் பிள்ளைகளாயிருப்பதையே விரும்புகிறார். பழைய ஏற்பாட்டில் தூரமாய் இருந்த தேவன், கிறிஸ்தவர்களுக்கு "அப்பா! பிதா!"வாக இருக்கிறார். இந்த சத்தியம் நமது புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது! மீட்பு என்பது சுவீகரித்தலைச் சாத்தியமாக்குகிறது. தேவனு டைய பிள்ளையாயிருக்கிறவர் தமது இருதயத்தில் இருந்து ஆவியானவர் "அப்பா! பிதாவே!" என்று உரத்துக்கூவுதலை வாக்குத்தத்தமாக பெறு கிறார் (கலாத்தியர் 4:4-7).

ஆச்சரியமான கிருபை! கிருபையினால் தேவன் நமக்கு இயேசுவின் மூல மாக சுவீகரித்தலை முன் குறித்தார். தேவன் தமது அன்பான குமாரனாகிய இயேசுவுக்குள் நம்மை ஏற்றுக்கொண்டுள்ளார். அவரது இரத்தத்தின் மூலமாக மீட்பு வருகிறது. இரட்சிப்புக்கான சுவிசேஷ செய்திக்குக் கீழ்ப்படிதலின்பேரில், நாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவருக்குள் முத்திரை போடப்பட்டோம் (எபேசியர் 1:3-14). இது வேதவசனங்களில் "கீரிடத்தில் உள்ள வைரமாக" ஜொலிக்கிறது. இங்கு நமது விசுவாசத்தின் அடிப்படை உள்ளது. தேவனுடைய மாபெரும் அன்பை - அதாவது, மன்னிக்கப்பட்ட பாவிகள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்பட முடியும் என்பதை - யோவான் வெளிப்படுத்தினார். யோவான், "நாம் இப்பொழுது பிள்ளைகளாயிருக்கிறோம்!" என்று கூறினார் (1 யோவான் 3:1, 2). என்ன ஒரு ஆழ்ந்தறிவுள்ள சிந்தனை! என்ன ஒரு சிலாக்கியம்! இதில் நாம் சுயாதீனம் மற்றும் குமாரத்துவம் என்ற ரோமக் கருத்தைக் காணுகிறோம். சுயாதீனம்! மீளக்கட்டுவிக்கப்பட்டிருத்தல்! தேவனுக்கு நன்றி! கிறிஸ்துவை உரிமைகோருதல் என்பது குற்றமற்றவர் எனக்கூறப்பட்டு விடுவிக்கப்படுதலாக, கடன் தீர்க்கப்படுதலாக உள்ளது. நாம் வாழ்வின் யுத்தத்தில் தனித்துப் போராடி வெற்றிபெற இயலாதவர்களாக இருக்கிறோம். நாம் செய்ய இயலாததைத் தேவன் செய்கிறார். எனவே நாம் எவ்வாறு இருக்க முடியும் என்பதை எண்ணத்துணியாதிருக்கிறோமோ, அவ்வாறு நாம் இருக்க முடியும்.

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்புகள்

[1]வெளிப்படுத்தின விசேஷம் *5:6, 12, 13; 6:16; 7:9, 10, 14; 12:11; 13:8; 14:1, 4; 21:9; 22:1, 3* ஆகியவற்றைக்காணவும். [2]Author unknown, "He Paid a Debt," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [3]ரோமர் *5:5-10;* எபேசியர் *1:3-13;* பிலிப்பியர் *3:7-10;* எபிரெயர் *2:9, 14-17; 7:25; 9:28; 10:10; 12:1, 2; 1* பேதுரு *2:24; 1* யோவான் *2:1, 2* ஆகியவற்றைக் காணவும். [4]Charles Hodge, *Systematic Theology*, vol. 2 (New York: Scribner, Armstrong, and Co., 1876), 555. [5]கிறிஸ்தவர்களின் இருதயத்தில் வாழ்வதற்குத் தேவனுடைய வழி (ரோமர் *8:9-11; 1* கொரிந்தியர் *6:19, 20*ஐக் காணவும்).